**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 18.10.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் PMIST– ஐ பார்வையிட்டனர்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (AEC&RI), கோயம்புத்தூர் சார்ந்த பி.டெக். (வேளாண் பொறியியல்) மாணவர்கள் சமீபத்தில் ஒரு அனுபவ கல்வி களப்பயணத்தை மேற்கொண்டனர். இந்த பயணத்தை முனைவர் அ. ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்) தலைமையில், முனைவர். ஜெ. இராமச்சந்திரன் (மண் மற்றும் நீர் பாதுகாப்பு துறை) மற்றும் முனைவர். ர. திவ்யாபாரதி (புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை) ஒருங்கிணைத்தனர். இப்பயணத்தின் நோக்கம் மாணவர்களுக்கு நிலைத்துவமான வேளாண் வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மை குறித்து முழுமையான புரிதலை வழங்குவதாகும்.

மாணவர்கள், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (PMIST), தஞ்சாவூரில் அமைந்துள்ள உயிரி ஆற்றல் உயராய்வு மையத்தை பார்வையிட்டனர். இங்கு இந்தியாவின் முதல் 500 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட பன்மூல உயிரிவாயு உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இது உயிரிகழிவுகளிலிருந்து 60 கிலோவாட் மின்னாற்றலை உருவாக்குகிறது. மேலும், அந்த ஆலையில் உருவாகும் செரித்த சாணக்கரைசல், மண்புழு உரம் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், மாணவர்கள் அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிற பசுமை முயற்சிகள் குறித்தும் பார்வையிட்டனர். பயன்படுத்தப்பட்ட தேர்வுத்தாள்கள், காகித மறுசுழற்சி ஆலையம் மூலம் புதிய கோப்புகளாக தயாரிக்கப்படுவது மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைப் பயன்படுத்தி பாசனம் செய்யப்படும் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட மூங்கில் காடு ஆகியவற்றைக் கண்டு கற்றறிந்தனர். இந்தப் பயணம், மாணவர்களுக்கு வகுப்பறை அறிவையும் நடைமுறை அனுபவத்தையும் இணைக்கும் சிறந்த வாய்ப்பை வழங்கின. இது, எதிர்காலத்தில் நிலைத்துவமான வேளாண் ஆற்றல் மேலாண்மைக்கான முக்கியக் கற்றல் அனுபவமாக அமைந்தது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**